DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, KANNIYAKUMARI AT NAGERCOIL.**

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 312/2023
Prosecution Witness-26

Deposition of witness for

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ஸ்டீபன் |
| Father's / Husband's Name | : | முத்துசாமி |
| Village | : | செம்பொன்விளை |
| Taluk | : | கல்குளம் |
| Calling | : | உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| Age | : | 63 |
| Dated | : | 11.08.2026 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.08.2026.**

**(1ம் எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர், 2ம் எதிரி ஆஜர் இல்லை 2ம் எதிரி சார்பில் B.N.S.S. பிரிவு 355-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. 3ம் எதிரி சிறையில் இருந்து ஆஜர் படுத்தவில்லை ஆனால் அவருடைய வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார்.)**

**முதல் விசாரணை:-**

நான் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 2023ம் ஆண்டு ஆரால்வாய்மொழி காவல்நிலையத்தில் பணியில் இருந்த சமயத்தில் 09.06.2023ம் தேதி 21.30 மணிக்கு நான் பணியில் இருந்த போது மனுவேல் மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இண்டிமேசனை பெற்று 22.00 மணிக்கு மனுவேல் மருத்துவனை சென்று இண்டிமேசன் குறிப்பிடப்பட்டுள்ள நபர் ஏசுதாஸ் த/பெ. கார்கொலஸ் மேற்கு ஆரல்வாய்மொழி என்பவர் சிகிட்சையின் போது இறந்து விட்டதாகவும் பிரேதமானது ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது. இறந்து போன ஏசுதாசன் என்பவர் சம்பவத்தின் போது அணிந்திருந்த பச்சை, கருப்பு வெள்ளை கோடு போட்ட சட்டை ஒன்று அதையும் பெற்று ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு ஏசுதாசன் என்பவர் மனைவி ஜெயா என்பவர் எழுத்து பூர்வமாக கொடுத்த புகார்மனுவை 23.30 மணிக்கு பெற்று 10.06.2023 தேதி 00.30 மணிக்கு ஆரல்வாய்மொழி காவல்நிலையத்தில் வைத்து புகாரின் தன்மைப்படி நிலைய குற்ற எண். 145/2023, இதச 341, 342, 294 பி, 302, 506(2) ன் படி வழக்கு பதிவு செய்தேன். **மேற்படி நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 28 ஆக குறியிடு**

**செய்யப்படுகிறது**. முதல் தகவல் அறிக்கையின் அசலையும் வாதியின் புகார்மனுவையும் இணைத்து விரைவு தபாலாக 2003 திரு. சாலோமன் என்பவர் வாயிலாக கனம் பூதப்பாண்டி நீதிமன்றத்திற்கு தக்க நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை ஆய்வாளர் அவர்களின் மேல்விசாரணைக்காக வைத்தேன். என்னிடம் காட்டப்படும் மேற்படி கைப்பற்றப்படட சட்டை சான்று பொருள் 2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

புகாரில் புகார்தாரருக்கு புகார்மனுவை எழுத படிக்க தெரியததால் நடந்த சம்பவத்தை சொல்ல சொல்ல புகார்தாரர் மகன் சுதன் என்பவர் எழுதி படிக்க கேட்டேன் என்று புகார்தாரர் சொல்லியுள்ளார். முதல் தகவல் அறிக்கையில் புகார்தாரர் ஜெயா எழுத்தால் எழுதிக்கொடுத்த புகார் மனுவை பெற்று என்று குறிப்பிட்டுள்ளேன். புகார் வாக்குமூலத்தில் விஜயன் என்பவர் எழுதிக்கொடுத்ததாக புகார்மனுவில் இல்லை. ஆரல்வாய்மொழி காவல்நிலையத்திற்கும் பூதப்பாண்டி நீதிமன்றத்திற்கும் சுமார் 10 முதல் 15 கி.மீ இருக்கும். சம்பவ இடத்திற்கும் காவல்நிலையத்திற்கும் சுமார் 1 கிமீ தூரம்

இருக்கும். நீதிமன்றத்திற்கு எப்போது முதல் தகவல் அறிக்கை சென்றடைந்தது என்று எனக்கு தெரியாது. முதல் தகவல் அறிக்கையில் முதல் தகவல் அறிக்கையை எந்த நேரத்தில் நீதிமன்றத்திற்கு நீதிமன்றத்திற்கு சென்றடைந்தது என்று குறிப்பிடப்படவில்லை ஆனால் தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொன்னது போல் சொன்ன இடத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பின்னால் ஆய்வாளர் மற்றும் மருத்துவர் அறிவுரையின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. முன் தேதியிட்டு பின்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தட்டச்சு என்னால் செய்யப்படவில்லை என்றால் தட்டச்சர் தட்டச்சு செய்தார். புலன் விசாரணை அதிகாரி என்னை எந்த தேதியில் விசாரித்தார் என்று நியாபகம் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் தகவல் கிடைத்த நேரம் 00.30 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு மனுவேல் மருத்துவமனையில் இருந்து 09.06.2023 அன்று 00.30 மணிக்கு தகவல் கிடைத்தது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை

உடனடியாக பூதப்பாண்டி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மனுவேல் மருத்துவமனையில் இருந்து எந்தவிதமான தகவல் கிடைக்கப்பெற்றது என்றால் போண் மூலமாக தகவல் கிடைத்தது. மேற்படி தகவல் கிடைத்தபின் தகவலை பதிவு செய்ய பதிவேடு உண்டு. நான் பதிவு செய்ததாக சொல்லப்படும் முதல் தகவல் அறிக்கை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் என்னால் பதிவு செய்யப்பட வில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையை புலன் விசாரணை அதிகாரிக்கு எந்த தேதியில் எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முக்கால்மணி நேரத்தில் காவல்நிலையத்தில் வைத்து கொடுத்தேன்.

**3ம் எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்புரை செய்கிறார்.**